CONSORTIUM OF CHA HUMANITARIAN AGENCIES

# மனித நேய அமைப்புகளின் கூட்டமைப்பு

யாழ்ப்பாண மாவட்ட அலுவலகம்

மலர் 01 வெளியீடு [illegible] யூலை - ஓகஸ்ட் 2008.

சமூக பாதுகாப்பு வலையமைப்பு

# செய்திமடல்

யாழ்ப்பாணம்



## ஆகஸ்ட் CPN கூட்டத்தில் முன்வைக்கப்பட்ட விடயங்கள்

- யாழ்மாவட்டத்தில் வைத்தியசாலைகளில் நோயாளர் எதிர் நோக்கும் பிரச்சனை தொடர்பாகவும் வைத்தியர்பற்றாக்குறை தொடர்பாகவும் CPN பிரதிநிதிகள் குழு மாவட்ட சுகாதாரவைத்திய அதிகாரியை சந்தித்து அதுசம்மந்தமாக கலந்துரையாடப்பட்டது.
- CPN கூட்டத்தில் முன்வைக்கப்பட்டதற்கமைய சில்லாலை பணடத்தரிப்பு கிராமத்தில் தெரிவு செய்யப்பட்ட 23 பயனாளி களுக்கும் வாழ்வாதார உதவி பெற்றுக்கொடுக்கப்பட்டது.
- சங்கானை பிரதேச செயலர் பிரிவில் மிகவும் வறிய சில பாடசாலைகளில் உணவு சமைப்பதற்காக சிறிய கொட்டகை அமைத்துக் கொடுக்கவேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப் பட்டது. இதை CHA தல்மையகத்திற்கு தெரியப்படுத்துவதென முடிவெடுக்கப்பட்டது.
- டயலொக் காரியாலையம் யாழ்ப்பாணத்தில் இயங்காமையினால் மக்களுக்கு ஏற்படுகின்ற பாதிப்புக்கள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

## சமூகப் பாதுகாப்பு வலையமைப்பு

யாழ்மாவட்ட சமூகப்பாதுகாப்புக் குழு வலையமைப்பானது **(Community Protection Network - CPN)** கொழும்பு மனித நேய அமைப்புக்களின் கூட்டிணைய **(CHA)** அனுசரணையுடன் யாழ்மாவட்டத்தில் உள்ள அரசசார்பற்ற நிறுவனங்கள், சமூகம்சார் சங்கங்களின் வெளிக்கள உத்தியோகத்தர்கள், அரசஉத்தியோகத்தர்கள் மற்றும் தன்னார்வ தொண்டர்களை கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது.

## உள்ளடக்கம்


- ஆகஸ்ட் CPN கூட்டத்தில் முன்வைக்கப் பட்ட விடயங் கள்
- CPN ஊடாக மாற்றுத் தொழில் செய்வதற்கான உதவித்திட்டம்.
- சிறுவருக்கான அபிவிருத்தி நிலையம்
- ஒரு தாயின் அவலநிலை
- குடும்ப புனர்வாழ்வு நிலை யம்.
- CHA யின் யாழ் மாவட்ட வள நிலையம்.
- மனித உரிமைகளில் டிப்ளோமா.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# CPN ஊடாக மாற்றுத் தொழில் செய்வதற்கான உதவித்திட்டம்



மீன்பிடித் தொழிலை தமது வாழ்வாதாரத் தொழிலாகக் கொண்டு தமது அன்றாட வாழ்க்கையை நடாத்தி வந்தவர்கள் 1990ம் ஆண்டு ஏற்பட்ட போர்ச்சூழல் காரணமாக இடம்பெயந்த நிலையில் சில்லாலை, பண்டத்தரிப்பில் மீண்டும் மீன் வியாபாரத்தைக் கொண்டு வாழ்க்கையை ஓட்டி வந்தவர்கள் தற்போது நடைமுறையில் இருந்து வரும் மீன்பிடிக் கட்டுப்பாடுகளினால் பாதிக்கப்பட்டு வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் மீனவக் குடும்பங்களுக்கு அவர்களது வாழ்வாதாரத் தினை உயர்த் தும் நோக்கில் கிராம மீனவர் சங்கமூடாக **CPN** கூட்டத்தில் முன்வைக்கப்பட்ட கோரிக்கையை **CHA** தலைமையகத்திற்கு அனுப்பி ஒப்புதல் பெறப்பட்டது. இவர்களுள் கிராம மீனவர் சங்கத்தின் உதவியுடன் 23 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு இவர்களுக்கான வாழ்வாதார உதவிகள் பெற்றுக் கொடுக்கப்பட்டது.

இவர்களுள் 6 பயனாளிகளுக்கு மாடுவளர்ப்பிற்கான உதவியும், 6பயனாளிகளுக்கு தையல் இயந்திரங்





களும், 6 பயனாளி களுக்கு கோழி வளர்ப்பிற்கான உதவியும், 5 பயனாளிகளுக்கு ஆடு வளர்ப்பிற்கான உதவியும் வழங்கப்பட்டது.

இவ்வாறு பாதிப்பிற்கு உள்ளான இவர்களுக்கு மாற்றுத் தொழில் செய்வதற்கான உதவி வழங்கியதன் மூலம் தொடர்ந்தும் இவர்கள் தமது வாழ்க்கையை கொண்டு நடாத்தக் கூடியதாக இருக்கும் என்பது திண்ணம். தொடர்ந்தும் இது போன்ற உதவித் திட்டங்களை இனி வரும் காலங்களிலும் செய்வதன் மூலம் யாழ் மாவட்டத்தில் போர்ச்சூழலினால் தொழிலை இழந்து வறுமைக் கோட்டிற்கு கீழ் பொருளாதார நெருக்கடியில் வாழ்கின்ற குடும்பங்களை பொருளாதார நெருக்கடியிலிருந்து மீட்க முடியும்.

தொகுப்பு
**A.** ரஞ்சித்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுவருக்கான அபிவிருத்தி நிலையம் center for child development

**1. அமைவிடம்**

76A, அம்மன் வீதி-
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

**2. பொதுநோக்கம்**

சிறுவர்களின் உரிமைக்கு மதிப்பளித்து அவர்கள் எதிர்நோக்கும் தடை களை நீக்கி உதவி புரிந்து அவர்களை வருங் கால சமூகத்தில் உன்னதமான நிலையில் பங்களிக்கச் செய்தல்

**3. தற்போதய செயற்பாடு**

ஏழைச்சிறுவர்கள், இரு பெற்றோரையும் இழந்த சிறுவர்களின் கல்விக்கு ஊக்குவிப்பும் உதவிபுரிதலும்

**4. இதன் அந்தஸ்து**

இலங்கை அரசாங்கத்தின் சமூகசேவைகள் அமைச்சின் சமூகசேவைகள திணைக்கள தேசிய செயல கத்தில் ஒரு தொண்டு நிறுவனமாக பதிவு செய்யப் பட்டுள்ளது.

இயக்குனர் சபையை உடையது.

யாழ் மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணை யத்தில் ஓர் அங்கத்துவ நிறுவனம்.

ஆரச அதிபர் செயலகத்தில் அரசாங்க அதிபரின் தலைமைத்துவத்தை ஏற்றுச் செயற்படும் யாழ் மாவட்ட சிறுவர் அபிவிருத்திக் குழுவிலும் இந்த நிறுவனத் திற்கு ஓர் அங்கத்துவம் உண்டு.

C.H.A இன் ஆலோசனை வழங்கும் அமைப்பிலும் இதற்கு அங்கத்துவம் உண்டு.

இந்த நிறுவனம் யாழ் மாவட்டத்தில் எல்லாப் பிரதேச செயலர் பிரிவுககளிலும் செயல்ப் படுகின்றது. இரு பெற்றோர்களை இழந்த சிறுவர்களின் உதவித்திட்டம் யாழ் மாவட்டத்தில் 100 பிள்ளைகளுக்கு வழங்கப் படுகின்றது. ஆரம்பத்தில் இத்திட்டம் சமுர்த்தி அலுவலர் கள் மூலம் நடைமுறைப் படுத்தும் நோக்குடன் வடிவமைக்கப்பட்டது. அரசாங்கம் பிரதேசசெயலர் அலுவலகங் களில் சிறுவர்களின் உரிமை களை மேம்படுத்தும் அலுவலர்களை நியமித்துள்ள மையால் இத்திட்டம் அவர் களின் பங்களிப்புடன் செயல்ப் படுத்தப் படுகின்றது. இத் திட்டத்தில் உள்ள பிள்ளை களுக்கு மாதம் ரூபா500 உதவியாக வழங் கப் படுகின்றது. உதவிபெறும் சிறுவர்கள் பாடசாலையில் கல்விகற்கின்றார்கள். இவர்கள் தங்கள் உறவினர்களுடன் குடும்பசூழலில் உள்ளார்கள். அரசாங்கம் வழங்கும் இலவச கல்விவசதியுடன் இவ் உதவியும் கிடைப்பதால் பிள்ளைகள் தங்கள் கற்றல் தேவைகளை பூரணப்படுத்தக் கூடியதாக உள்ளது. இவ்வுதவி கா.பொ.த உயர்தர கல்வி முடியுமட்டும் வழங்கப்படும். இத்திட்டம் பிரதேசசெயலர்கள் ஊடாக செயல்ப்படுத்தப் படுவதால் பிள்ளைகளின் முன்னேற்றங்கள் அவர்கள் எதிர்கொள்டளும் தடைகள் நீங்க உதவிகளைச் செய்யக் கூடியதாக உள்ளது. இதற்கு Hope For Children- Moratuva Srilanka என்னும் நிறுவனம் நிதிஉதவி புரிகின்றது. இந்த நிதிநிறுவனம் வருடத்தில் இரு தடவைகள் தங்கள் நிதியை ஒழுங்காக வழங்குகின்றது.

அடுத்து செயற்படுத்தும் திட்டமானது வறிய பிள்ளை களின் கல்வி உதவித் திட்டமாகும். இத்திட்டத்தில் 150 சிறுவர்கள் யாழ் மாவட்டத்தில் உதவி பெறுகிறார்கள். இதற்கு லண்டன் கனகதுர்க்கை அம்மன் அறக்கட்டளையும் சில வெளிநாட்டுப் பிரமுகர்கள் உள்நாட்டுப் பிரமுகர்கள் வடஇலங்கை போக்குவரத்து ஊழியர்களின் நன்கொடை கொடி தின அன்பளிப்புக்கள் ஆகியவற்றிலிருந்து பெறப்படும் நிதிமூலம் நடைமுறைப படுத்தப்படுகின்றது இந் நிதியிலிருந்து அத்தியவசிய அலுவலக செலவுகள்போக மீதி சிறுவர்களுக்கு இவர்கள் படிக்கும் தரத்திற்கேற்ப உதவிகள் வழங்கப்படுகின்றது. 6ம் ஆண்டிற்குக்கீழ் ரூபா200, 7-9ம் ஆண்டுவரை 250ரூபாவும், 10ம்ஆண்டிற்கு மேல் ரூபா300 வழங்கப்படுகின்றது. இத்திட்டம் நிறைவேற பாடசாலை அதிபர்கள், அரசசார்பற்ற நிறுவனத்தினர், தெல்லிப்பளை பலநோக்கு கூட்டுறவுச்சங்கம், சிலபகுதிகளில் உதவி அரசபிரிவில் C.R.P.A அலுவலர்களும் உதவி புரிகிறார்கள். திட்டங்கள் நிறைவேற அலுவலர்கள்

(5ம் பக்கம் பார்க்க)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு தாயின் அவலநிலை



திருமதி லத்தீவ் பரமேஸ்வரி தனது கணவன் மற்றும் மூன்று பிள்ளைகளை அடுத்தடுத்து வன்முறைகளுக்குப் பலி கொடுத்த ஒரு ஏழைத் தாய் 1983ம் ஆண்டு ஆடிக் கலவரத்தில் அனுராதபுரத்தில் வைத்து இவரது கணவர் லத்தீவ் காடையர்களால் உயிருடன் எரித்துக் கொல்லப் பட்டார் இதனால் பிரதான உழைப்பாழியை இழந்த இவரது குடும்பம் மிகவும் வறுமை நிலைக்குத் தள்ளப் பட்டது. குடும்ப வறுமை நிலை காரணமாக இவரது மூத்த மகன் ராஜ்குமார் 15 வயதில் பாடசாலைக் கல்வியை (படிப்பை) இடைநிறுத்தி விட்டு தனியார் பேருந்து ஒன்றில் நடத்துனராக வேலை செய்து குடும்பத்தை பட்டினிச் சாவிலிருந்து காப்பாற்றினான்.

ஆனால் குடும்பத்திற்கு மீண்டும் ஒரு வேதனைக்காலம் விரைவில் வந்தது. 1985ம் ஆண்டு மாவிட்டபுரத்தில் வைத்து ராஜ்குமார் சுட்டுப் படு கொலை செய்யப்பட்டார். இந்தத் துயரத்துடன் வாழ்ந்த பரமேஸ்வரி தனது மூன்று பிள்ளைகளையும் காப்பாற்று வதற்காக பலகாரங்கள் செய்து கடைகளுக்கு விற்று வாழ்க்கையை ஓட்டிவந்தார். "கெட்ட குடியே கெடும்" என்பதை உறுதிப்படுத்துவது போல அவரின் இரண்டு பிள்ளைகள் ல.சுரேஸ்குமார், ல.ஜெயக்குமார் ஆகிய இருவரும் பாடசாலை விட்டு வரும் போது தெல்லிப் பளைச் சந்தியில் விமானக் குண்டு வீச்சில் அகப்பட்டு உடல் சிதறிப் போயினர். வேதனையே வாழ்க்கையாகிப் போனதால் மனது நொருங்கிப் போன பரமேஸ்வரிக்கு இப்போது எஞ்சியிருப்பதெல்லாம் தேவகுமாரி எனும் ஒரே ஒரு மகள் மட்டும்தான். அன்றாட வாழ்க்கைக்கே



அல்லாடிவந்த பரமேஸ்வரியின் அவலத்தை மனிதநேய அமைப்புக்களின் கூட்டமைப்பு (CHA) அறிந்து கொண்டு அவரது வாழ்க்கைக்கு ஆதாரம் ஒன்றைப் பெற்றுக் கொடுக்க முன்வந்தது.

உணவுப் பொருட்களை உற்பத்தி செய்து விற்பனைக்கு விடுவதில் பரமேஸ்வரி திறமை வாய்ந்தவராகக் காணப் பட்டதால் பலகாரங்கள் மற்றும் உணவுப் பொருட்களை உற்பத்தி செய்வதற்கு வேண்டிய உபகரணங்கள் மற்றும் மூலப் பொருட்களை CHA நிறுவனம் பெற்றுக் கொடுத்தது. உற்பத்தி செய்த உணவுப் பொருட்களை அயலில் உள்ள கடைகளுக்கு விநியோகிக்க உதவியாக அவரது மகளுக்கு ஒரு துவிச்சக்கர வண்டியையும் CHA நிறுவனம் வழங்கியது. மேலும் இவரது குடும்ப வருமானத்தைப் பெருக்க உதவியாக கால் நடைகளும் பெற்றுக் கொடுக்கப்பட்டது. உறவினர், ஊரார் எல்லோரும் கைவிட்ட பின்னர் வாழ்க்கையில் வறுமையைத் தவிர அறியாத இந்த அவலத் தாயின் வாழ்வில் சிறிதளவாவது நம்பிக்கை ஊட்டுவதே மனிதநேய அமைப்புக்களின் கூட்டமைப் பின் (CHA) பிரதான நோக்கமாகும். இன்று வசதி இல்லா விட்டாலும் கஷ்டம் இல்லாமல் வாழும் நிலையைக் காணக் கூடியதாக உள்ளது.

தொகுப்பு
ந.பாஸ்கரன்
CHA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குடும்ப புனர்வாழ்வு நிலையம் இல .18. கோவில் வீதி. யாழ்ப்பாணம்.



CHA நிறுவனத்தின் அனுசரனையுடன் பின்வரும் செயற் திட்டங்களை நடைமுறைப் படுத்தியுள்ளோம்

- ❖ 2005/2006ஆம் ஆண்டு CHA யின் நிதி உதவியுடன் 21 பயனாளிக்கு சாரதி அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொடுத்தமை
- ❖ 2006 ஆம் ஆண்டு மிதிவெடியினால் கால் இழந்த சிறுவனுக்கு பாடசாலை அனுமதி பெற்றுக் கொடுத்ததோடு CHA Colombo நிறுவனத்திடமிருந்து துவிச்சக்கர வண்டி பெற்றுக் கொடுத்தமை.
- ❖ 2008 ஆம் ஆண்டு தற்போது CHA யின் நிதி உதவியுடன் 50 பயனாளிகளுக்கு வாழ்வதார திட்டம் வழங்கியுள்ளமை. (சிறுவியாபாரம் 19, ஆடு வளர்ப்பு 11, மாடு வளர்ப்பு 04, கோழி வளர்ப்பு 10, விவசாய உபகரனம் 02, மீன் பிடி 02, தையல் இயந்திரம் 02, சிற்றுண்டி வியாபாரம் 01)
- ❖ CHA நிறுவனத்தின் நடமாடும் இலவச சட்ட ஆலோசனையும், ஆவணப் பதிவு மூலம் யாழ்ப்பாணம், சங்கானை, சண்டிலிப்பாய் பிரதேச செயலக பகுதியில் இருக்கும் எமது பயனாளிகள் பயன்பெற்றமை. பிறப்பு சான்றிதழ் 307, இறப்பு சான்றிதழ் 28, திருமணப் பதிவுச் சான்றிதழ் 16, பிந்திய திருமணங்கள் 12.
- ❖ CHA யின் மாதந்த வாழ்வாதார கூட்டத்திற்கு தலைமை வகித்தலும், கலந்து கொள்ளலும்.
- ❖ CHA இன் மாவட்ட சமூக பாதுகாப்புக் குழுக் கூட்டத்தில் மாதாந்தம் கலந்து கொள்ளல்.

தகவல்:
S.C.S.சிதம்பரநாதன்,
மாவட்ட இணைப்பாளர்,
குடும்ப புனர்வாழ்வு நிலையம்,
யாழ்ப்பாணம்.

3ம் பக்கத் தொடர்ச்சி....

ஒருவரும் நியமிக்கப் படவில்லை. இயக்குனர் சபையினர் தங்கள் இலவச சேவையை வழங்குகின்றார்கள் ஆதலால் கிடைக்கும் நிதியின் பெரும்பகுதி சிறுவர்களைச் சென்றடைகின்றது என்பதைக் கூறிக்கொள்வதில் சிறுவருக்கான அபிவிருத்தி நிலையத்தினர் மிக்கமகிழ்ச்சி அடைகின்றார்கள்.

இந் நிறுவனம் அண்மையில் தான் தனியான கட்டடத்தில் இயங்கத் தொடங்கியுள்ளது. பௌதீக வளங்கள் மிகவும் குறைந்த நிலையிலும் தன் சேவையை தன்னால் இயன்ற அளவில் செய்துவருவது போற்றுதற் குரியதாகும். சிறுவர்களின் நலனில் அக்கறையுடைய நலன் விரும்பிகள் அளிக்கும் நன்கொடைகளை ஏற்றுக் கொள்ளும் நிலையில் இந் நிறுவனத்தினர் இருக்கின்றார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# CHA யின் யாழ் மாவட்ட வள நிலையம்



நூலகம் என்பது, பொது அமைப்புக்கள், நிறுவனங்கள் அல்லது தனி நபர்களால் உருவாக்கப்பட்டுப் பேணப் படுகின்ற தகவல் மூலங்களின் அல்லது சேவைகளின் ஒரு சேமிப்பு ஆதும். மரபு வழியான நோக்கில் இது நூல்களின் சேமிப்பு எனலாம். இந்நூல் களையும், வேறு மூலங் களையும், சேவைகளையும், இவற்றைத் தாங்களே சொந்த மாக வாங்கவிரும்பாத அல்லது வாங்க முடியாத அல்லது ஆய்வுகளுக்காகத் தொழில் முறை உதவி தேவைப்படும் மக்கள் பயன்படுத்துகிறார்கள்.

நூல்கள் தவிரத் தகவல் சேமிப்புக்கான பிற ஊடகங் களைச் சேமித்து வைத்திருப் பதுடன், பல நூலகங்கள் இப்பொழுது, நுண்படலம் (Microfiche) நுண்சுருள்தகடு (MIcrofilm), ஒலிநாடாக்கள், குறுவட்டுகள், ஒலிப்பேழைகள், டிவிடிக்கள் என்பவற்றில் பதியப்பட்ட நிலப்படங்கள், வேறு ஆவணங்கள், ஓவியங்கள், என்பவற்றைச் சேமித்துவைக்கும் இடங் களாகவும் அவற்றைப் பெற்றுக் கொள்வதற்கான இடங் களாகவும் உள்ளன. இவை தவிர, தனியார் தரவுத் தளங்களுக்கான அணுக்கம் மற்றும் இணைய அணுக்கம் முதலியவையும் வழங்கப் படுகின்றன. எனவே இன்றைய நவீன நூலகங்கள், பல மூலகங்களிலிருந்து பல்வேறு வடிவங்களில் தகவல்களைத் தடையின்றிப் பெற்றுக் கொள் வதற்கான இடங்களாகவும் திகழ்கின்றன. இவற்றோடு, தகவல்களைத் தேடி அவற்றை ஒழுங்குபடுத்துவதிலும், தகவல் தேவைகளுக்கு விக்கமளிப் பதிலும், நிபுணத்துவம் கொண்டவர் களான நூலகர் களின் சேவையும் வழங்கப் படுகின்றது.

இந்தவகையில் **CHA** இன் யாழ்மாவட்ட வளநிலயமானது 01.03.2006 இலிருந்து இன்று வரை சிறப்பாக இயங்கி வருகிறது. இந்த வளநிலயத் திற்கு பல்வேறுபட்ட பிரி வினரும் வந்து வாசித்து பயன் பெற்று செல்கின்றனர். இங்கு வாரம் ஒன்றிற்கு 3 முதல் 4 வரையான வாசகர்கள் வந்து பயன் பெறுகின்றனர். வேறு



நூலகங்களுடன் ஒப்பிடும் போது இங்கு அதிகமாக மனித உரிமைகள், சமாதானம், மோதல் தீர்வு போன்ற வற்றுடன் தொடர்புடைய நூல்களும் செய்தி மடல்களும் அதிக அளவில் காணப் படுவதனால் இவை தொடர்பான தகவல்கள் தேவைப்படுபவர்களுக்கு இவ் வள நிலையமானது பெரும் சொத்தாக காணப்படுகின்றதே இந்த வள நிலையத்தின் வளர்ச்சிக்கு மிக முக்கியமான காரணமாக காணப்படுகின்றது. இது தவிர இங்கு மனித உரிமைகள், இயற்கை அழிவு கள், முதலுதவி, யுத்தத் திலுருந்து நம்மை எவ்வாறு பாதுகாக்க வேண்டும் என்பது தொடர்பான விளக்கப் படங்கள் அடங்கிய சுவரொட்டிகள் துண்டுப் பிரசுரங்கள் என்பனவும் குறுவட்டுக்கள் என்பனவும் காணப்படுகின்றது.

இது தவிர இன் நூலக உதவியாளரினால் தொழில் வாய்ப்புக்கள் (Vacancies) தொடர்பான தகவல்களும் CKC Information Alert எனும் இணையத் தளத்திலிருந்து பெற்று இந்த நூலகத்திற்கு வரும் வாசகர்களுக்கு வழங்கப் படுகின்றது. மேலும் இத்தகவல் களை வலைப்பின்னல் ஊடாக அனைத்து உள்ளூர் மற்றும் வெளியூர் அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் அனைத்திற்கும் அனுப்ப திட்டமிடப்பட்டுள்ளது. இந்த சேவையின் மூலம் இவ் வளநிலையமானது இதனது சேவையை கட்டடத்திற்கு வெளியேயும் விரிவுபடுத்தி ஓர் நவீன நூலகத்திற்கு இணை யாக வளர்ச்சி அடைந்து வருகின்றது.

"வாசிப்பு ஒருவரை பூரணமாக்குகின்றது."

தகவல்
**S.R.** சுகந்தன்
**CHA. Jaffna**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித உரிமைகளில் டிப்ளோமா

## நிகழ்ச்சித்திட்டம் பற்றி

இந்நிகழ்ச்சித்திட்டம் மனித உரிமைகள் எண்ணக்கருவைப்பற்றி ஆராய்ந்து, மனித உரிமைகளின் உலகளாவிய பரிமாணத்தையும் உள்ளூர் நிகழ்வுகள் மற்றும் போக்குகளைப் பற்றியும் கலந்துரையாடி மாற்றமொன்றை ஏற்படுத்துவதில் பங்குபற்றும் தனிமனிதர்கள் சமூகமொன்றைக் கட்டியெழுப்பும் ஒரு தொடர்பாடல் கற்கைநெறியாகும்.

1996ஆம் ஆண்டிலிருந்து 1500க்கு மேற்பட்டடோர் இக்கற்கைநெறியைப் பூர்த்தி செய்துள்ளனர்.

பங்குபற்றுநர்கள் மனித உரிமைகள் கண்ணோட்டமொன்றுடன் தமது சூழலை மதிப்பிடுவதற்கும் காத்திர பூர்வமானதொரு முறையில் அதனுடன் தொடர்பு கொள்வதற்கும் அவர்களை இவ்வாய்ப்பு ஊக்குவிக்கும்.

## விரிவுரை வழங்குவோர்

அரசாங்கத்திலும் அரச சார்பற்ற மற்றும் கல்வி நிறுவனங்களிலும் பணிபுரியும் மனித உரிமைகள் கல்வியாளர்கள், செயற்பாட்டாளர்கள் மற்றும் தொழில் வாண்மையாளர்கள் கொண்ட ஒரு குழு

## இந்நிகழ்ச்சித்திட்டம் யாருக்கு

மாணவர்கள், ஆசிரியர்கள், வைத்தியர்கள், வழக்கறிஞர்கள், அரசாங்க சேவையிலும் நிருவாகத்திலும் பணியாற்றுகின்ற ஆட்கள், அரச சார்பற்ற நிறுவனங்களின் பணியாளர்கள், ஊடகத்துறையினர், இளைஞர் தலைவர்கள், கூட்டுத்துறை ஆட்கள் மற்றும் மனித உரிமைகளிலும் நடப்பு விவகாரங்களிலும் ஆர்வம் கொண்டுள்ள ஆட்கள் அனைவருக்கும்.

## கற்கைநெறியின் கட்டமைப்பு

மனித உரிமைகள் எண்ணக்கரு
சிவில் மற்றும் அரசியல் உரிமைகள்
பொருளாதார, சமூக மற்றும் கலாசார உரிமைகள்
மனித உரிமைகளைப் பாதுகாக்கும் சர்வதேச மற்றும் உள்நாட்டு வரைச்சட்டங்கள்
மகளிர் உரிமைகள் / சிறுவர் உரிமைகள்
இன முரண்பாடு, உள்நாட்டில் இடம் பெயர்ந்தோர் உரிமைகள் மற்றும் மாற்றமுறும் நீதி ஆகியவற்றைப் புரிந்துகொள்ளல்
சூழல் தொடர்பான பொறுப்புணர்வு
கூட்டுச் சமூகப்பொறுப்பு

**ஆரம்பம்:**
"09 தை மாதம் 10ம் திகதி, சனிக்கிழமை"

**கற்கைநெறிக் காலம்: 6 மாதங்கள்**
(தொடர்ச்சியாக ஒவ்வொரு சனிக்கிழமையும் மு.ப. 9.00 மணிமுதல் பி.ப.1.00 மணிவரை, கொழும்பில் ஒரு வசதியான அமைவிடத்தில்)

கட்டணம்: 15,000/=

தொடர்புகளுக்கு - விண்ணப்பங்களுக்கும் மேலும் தகவல்களுக்கும் - **Unita Samuel**

**011 2502703 / 0112585815**

42, ஸ்கெல்டன் வீதி, கொழும்பு 5.
**e-mail :** edu@ihrsrilanka.org
**website:** www.ihrsrilanka.org

**பொறுப்பு.... சமாதானம்... நீதி... வெளிப்படைத்தன்மை... உரிமைகள்... சமாதானம்... செயற்பாடு... சுதந்திரம்... இரக்கம் மரியாதை... சமத்துவம்...ரிந்துகொள்ளள்... காலாச்சாராம்... பாரட்டு...**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







யாழ் பல்கலைக் கழகத்தில் கல்வி பயிலும் விசேட தேவையுடைய மாணவர்கள் மற்றும் வறுமைக் கோட்டுக்கு உட் பட்ட மாணவிகளுக்கும் கல்வி உதவித்திட்டத்தின் கீழ் கல்வி உபகரணங்கள், உணவுச் செலவுக்கான கொடுப்பனவு, பொதுத் தேவைக்கான உதவி மற்றும் விடுதிக் கட்டணம் என்பன CHA அலுவலகத்தில் வளங்கப்பட்டது.



CHA அனுசரணையில் யாழ் கல்வி வலய முன்பள்ளிப் பிரிவினரால் நடாத்தப் பட்ட உளவளத் துணை பயிற்ச்சி நெறியின் போது.






CHA அனுசரணையில் யாழ் கல்வி வலயப் பணிப்பாளர் திருமதி அ. வேதநாயகம் அவர்களால் **"வெற்றிக்கு வழி"** குறும்பட வெளியீட்டு நிகழ்வின் போது.







பெற்றோரை இழந்த அல்லைப் பிட்டி மாணவர்களுக்கு தொழில் பயிற்சி, கல்வி உபகரணம், பொதுத் தேவை, உடுபுடவை என்பன CHA அலுவலகத்தில் வைத்து வழங்கப் பட்டது.



வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட பாடசாலை மாணவர் களுக்கு கற்றலுக் கான தளபாட உதவி வழங்கல்.

CONSORTIUM OF
**CHA**
HUMANITARIAN AGENCIES

பிரசுரத்துக்கான ஆக்கங்கள் அடிப்படையில்
உங்களின் கருத்துக்கள், ஆலோசனைகள்,
பங்களிப்புகளை நாம் வரவேற்கின்றோம்.
தொடர்புகட்கு:
சமூகப்பாதுகாப்பு வலையமைப்பு செய்திமடல், யாழ்ப்பாணம்.

தொகுப்பு: ஆ. றஞ்சித்
CHA யாழ்ப்பாணம்

**CHA HEAD OFFICE:**
86 Rosmead Place,
Colombo - 07.

**யாழ்ப்பாண மாவட்ட அலுவலகம் இல.17, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.**
**தொலைபேசி இல.: 021 222 6655, 021 222 8030.**
email. jafdo@cha.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

GURU Printers, 39/2, Adiyapatham Road, Thirunelvely.